# அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம் - 638 183.



# ஆண்டுமலர்

## 2005-2006

Scanned with CamScanner


# மலர்க்குழு

திரு. மு. கந்தசாமி எம்.ஏ., எம்.எட்., எம்.பீல் முதல்வர் (பொறுப்பு)

திருமதி. வெ. கலைச்செல்வி எம்.ஏ., எம்.எட்., எம்.பீல் (தமிழ் விரிவுரையாளர்)

என். மைதிலி (ஆண்டு மலர் செயலர்)

Scanned with CamScanner



மாண்புமிகு தமிழக முதல்வர்

திரு. டாக்டர். **கலைஞர்.மு. கருணாநிதி** அவர்கள்

Scanned with CamScanner




**பேரா. இரா. கல்யாணதுரை** எம்.ஏ., எம்.பில்., எம்.எட்.,

முதல்வர்

**2006-2007**

Scanned with CamScanner



**பேரா. மு. கந்தசாமி** எம்.ஏ., எம்.எட்., எம்.பில்

முதல்வர் (பொறுப்பு)

**2005-2006**

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183.

## நாமக்கல் மாவட்டம்.

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! அலுவலக அன்பர்களே! இனிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் இக்கல்லூரியின் 51-வது ஆண்டு விழா, விளையாட்டுவிழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று இவ்வாண்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

### கல்லூரியின் வரலாறு

இக்கல்லூரி 1955-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பேராசிரியர் திரு.வி.சி.டைட்டஸ், எம்.ஏ.,எல்.டி., அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் ஒரு பகுதியாக இயங்கி வந்த இக்கல்லூரி 1972-ஆம் ஆண்டில் புதியதாகக் கட்டடம் கட்டப்பெற்றபின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் 1959-ஆம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும், 1974-ஆம் ஆண்டு எம்.எட் பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன.

1982-ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாய் இருந்த எம்.எட் பட்டவகுப்பு முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. அரசாணை எண். G.O.M.S. No. 543 Dt. 16.04.1990 ஆணையின்படி நமது கல்லூரி CTE அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு அந்தக் கல்வியாண்டிலேயே இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிக்க ஏதுவாக 1990-91 கல்வியாண்டில் இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகள் கட்டப்பட்டன. மேலும், இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி இக்கல்லூரி வளர உறுதுணையாய் இருந்த ஜே.கே.கே. மற்றும் எஸ்.எஸ்.எம். குடும்பத்தாருக்கும், முன்னாள் முதல்வர்களுக்கும், பெரியோர்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

Scanned with CamScanner

## கல்லூரி மாணவர் சேர்க்கை

இக்கல்லூரியில் பி.எட்., பட்டப்படிப்பு பயில்வதற்காக 105 மாணவர்களுக்கு இக்கல்வி ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு பி.எட். வகுப்பில் சேரும் பொருட்டு 11,104 மாணவ மாணவியர் விண்ணப்பித்திருந்தனர். கல்லூரிக் கல்வி இயக்குநரின் வழிகாட்டல் நெறியின்படி நுழைவுத்தேர்வு அடிப்படையில் 105 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒரு மாணவர் தொடர்ந்து வருகைதராததால் தற்போது பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 104 என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரி 1998-99 முதல் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று இயங்குகிறது. மேலும், இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கல்விக் கழகத்தால் (NCTE Bangalore) அங்கீகரிக்கப்பட்டது.

## மாணவர் மன்றங்கள்

இவ்வாண்டு கீழ்க்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு, ஒற்றுமை உணர்வோடும் பொறுப்போடும் செயல்பட்டு வந்துள்ளனர் என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

| | | |
|---|---|---|
| 01. | மாணவர் தலைவர் | - ரபீந்திரநாத்.பி |
| 02. | மாணவர் துணைத்தலைவர் | - உமா மகேஸ்வரி. எஸ் |
| 03. | ஆசிரியர் மன்றச் செயலர் | - அன்பு.கே |
| 04. | விளையாட்டுத்துறைச்செயலர் | - அருள் ராஜ்.வி |
| 05. | சமூகப்பணி மன்றச்செயலர் | - கார்த்திகேயன்.எஸ் |
| 06. | ஆண்டு மலர் செயலர் | - மைதிலி.என் |
| 07. | கைக்கலைத்துறைச்செயலர் | - குணசெல்வம்.கே |
| 08. | கேள்வி காட்சி கல்விச் செயலர் | - முருகேசன்.எஸ்.பி |
| 09. | பதிவேட்டுத்துறைச்செயலர் | - சிவகலை.ஆர் |
| 10. | உயிரியல் துறைச்செயலர் | - ரூபாதேவி.எம் |
| 11. | பொருளறிவியல் துறைச்செயலர் | - செந்தில்.சி |
| 12. | கணிதத்துறைச்செயலர் | - வெங்கட்ராமன்.எஸ் |
| 13. | ஆங்கிலத்துறைச்செயலர் | - சுமிதா.ஆர் |
| 14. | தமிழ்த்துறைச்செயலர் | - மகேஸ்வரி.பி |
| 15. | நூலகத்துறைச்செயலா | - ஜென்னீஸ்.எஸ் |



## கற்பித்தல் பயிற்சி

இவ்வாண்டு இக்கல்லூரி மாணவர்களுக்காக உற்றுநோக்கல் மற்றம் கற்பித்தல் பயிற்சிகளுக்கு வழக்கம்போல் ஆறு வாரங்கள் ஒதுக்கப்பட்டன. இதற்கு, முன் பயிற்சியாக நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி இக்கல்லூரியில் வழங்கப்பட்டது. உற்று நோக்கல் பயிற்சி 24.10.2005 முதல் 28.10.2005 வரையிலும், பெருகக் கற்பித்தல் பயிற்சி 7.11.2005 முதல்14.12.2005 வரையிலும் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தைச்சார்ந்த அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சங்ககிரி, அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளிபாளையம், அரசு மேல்நிலைப்பள்ளி குமாரபாளையம், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி பவானி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சித்தோடு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி கவுந்தப்பாடி, அரசு மேல்நிலைப்பள்ளி தளவாய்பேட்டை மற்றும் மையிலம்பாடி ஆகிய பள்ளிகளுக்குப் பயிற்சி ஆசிரியர்கள் அனுப்பப்பட்டு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. கற்பித்தல் பயிற்சியின் மூலம் பயிற்சி ஆசிரியர்களைப் பட்டை தீட்டிய வைரங்களாய் அறிவு ஒளிபெற உதவிய மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும், பள்ளித்தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் வழிகாட்டிகளாய் செயல்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறோம்.

## ஆசிரியர்-அலுவலர் பணியேற்பு-மாற்றம்

கல்லூரி முதல்வர் பொறுப்பிலிருந்து திரு.மா.ஜெகநாதன் அவர்கள் விலகிக்கொண்டதன் அடிப்படையில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திரு.மு.கந்தசாமி அவர்கள் 08.03.2006 அன்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் பொறுப்பு முதல்வராகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார். இக்கல்லூரியிலிருந்து ஒய்வுபெற்ற பேரா. டாக்டர்.ஆர்.தங்கவேல் அவர்கள் ஆங்கிலத் துறையில் திரு.கே.குருசாமி அவர்கள் உயிரியல் துறையிலும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் கௌரவ விரிவுரையாளராகப் பணியாற்றினார்கள். கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் உயிரியல் மற்றும் ஆங்கிலத்துறை மாணவர்களுக்குப் பெரிதும் பயனுடையதாக இருந்தது.

காலியாக இருந்த கண்காணிப்பாளர் பணியிடம் நிரப்பப்பெற்று திருமதி.எஸ்.பூர்ணிமாதேவி 15.02.2006 முதல் பணியாற்றி வருகிறார். இக்கல்லூரியின் உயிரியல் துறை ஆய்வக உதவியாளர் திரு.சா.ராஜேந்திரன், சேலம்-8, அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு இடப்பெயர்வு செய்யப்பட்டார்.



Scanned with CamScanner

## கல்விப் பயணம்

முதல்வர் (பொறுப்பு) திரு.ம.ஜெகநாதன் அவர்களின் ஏற்பாட்டின்படி, கல்விச்சுற்றுலா இரயில் பயணமாக ஹைதராபாத் சென்றது, கல்லூரியின் பொன்னேட்டில் குறிப்பிடும் நிகழ்ச்சியாக அமைந்தது. இந்த கல்விப்பயணமானது 19.02.2006 முதல் 24.02.2006 வரை மேற்கொள்ளப்பட்டு மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் அமைந்தது. இந்த நாட்களில், கல்விப் பயணப்பணியை மிகச்சிறப்பாக நடத்திட முழுமுயற்சி எடுத்து முன்னின்று நடத்திய முனைவர் அ.தேவகி மற்றும் உறுதுணையாக இருந்த பேராசிரியர்கள் திரு.மு.கந்தசாமி, திருமதி.வெ.கலைச்செல்வி, திரு.ந.சுப்ரமணியம் மற்றும் அலுவலக ஊழியர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

கல்விப் பயணத்தில் பளிங்குக் கற்களால் கட்டப்பெற்ற கலையம்சம் பொருந்திய பிர்லா கோவில் பெருமைமிகு சாலார்ஜங் அருங்காட்சியகம், பழமைவாய்ந்த கோல்கொண்டா கோட்டை, இந்து முஸ்லிம் ஒருமைபாட்டிற்கு உதாரணமாக சாலார்ஜங் சமாதிகளின் கட்டிட அமைப்பு, பிர்லா கோளரங்கம் தேசிய அறிவியல் கண்காட்சியகம், ஹைதராபாத் மற்றும் செகந்தராபாத் என்ற இரட்டை நகரங்களை பிரிக்கின்ற உசைன்சாகர் ஏரியில் அழகிய காட்சிகளுடன் அமைந்த பிரமாண்டமான புத்தர் சிலை போன்ற அனைத்து இடங்களையும் எம் மாணவச்செல்வங்கள் பெரும் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.

## நூலகம்

2005-2006 ஆம் கல்வியாண்டில் நூலகத்தில் 56 புத்தகங்கள் ரூ.7700 - தொகைக்கு அரசு நிதி ஒதுக்கீட்டில் வாங்கப்பட்டது. கீழ்காணும் நாளிதழ்கள், கல்வியியல் குறித்த மாத இதழ்கள், பருவ வெளியீடுகள் ரூ.2700-தொகைக்கு வாங்கப்பட்டன.

1. NCERT Publications - School Science, Value Education, Journal of Indian Education, Science Education.
2. காலச்சுவடுகள், புத்தகம் பேசுகிறது, தமிழரசு, விஞ்ஞானச்சுடர், கலைக்கதிர்-12 issue
3. தினமணி, The Hindu, Indian Express, Employment News.

நூலகம் முற்றிலும் திறந்த முறை (Open Access System) பயன்பாட்டில் மாணவ, மாணவியர்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. இக்கல்வியாண்டில் மாணவர்களால் சுமார் 1074 புத்தகங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. பார்வைப் புத்தகங்கள் (Reference Books) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு எளிதில் பயன்படுத்தும் வகையில் இருந்தது.

Scanned with CamScanner

## பிற விழாக்கள்

கல்லூரி வளாகத்தில் பொறுப்பு முதல்வர் அவர்கள் 15-08-2006 அன்று தேசிய கொடியை ஏற்றிக் கொண்டாடிய முதல்விழாவாக சுதந்திர தின விழா அமைந்தது. 3.10.2005 அன்று கல்லூரிப் பேரவைத் தொடக்கவிழா கல்லூரி முதல்வர் பொறுப்பு திரு.மா.ஜெகநாதன் அவர்கள் தலைமையில் கவாலியர் எம்.எஸ்.மதிவாணன் குத்துவிளக்கேற்றி, சிறப்புரையாற்ற மிகச் சிறப்பாய் நடைபெற்றது. 26.01.2006 அன்று குடியரசு தினவிழா பொறுப்பு முதல்வர் அவர்களாலேயே கொண்டாடப்பட்டது.

## பாடி வாழ்க்கை

பி.எட். மாணவர்களுக்கு சமூகப்பணி-பாடி வாழ்க்கை கல்லூரி வளாகத்தில் 20-12-2004 முதல் 24-12-2004 வரை ஐந்து நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பாடி வாழ்க்கை தொடக்கவிழா 20.12.2004 முற்பகல் 10 மணியளவில் திரு.வி.ஜி. பழனிச்சாமி, தலைமையாசிரியர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி குமாரபாளையம் அவர்களால் இனிதே துவக்கி வைக்கப்பட்டது. கீழ்காணும் தலைப்புகளில் சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்குத் தேவையான சீரிய கருத்துக்களை வழங்கினர்.

1. எய்ட்ஸ் விழிப்புணர்வு : டாக்டர். எஸ். அமுதாசிவானந்தம், மருத்துவ அலுவலர் அரசுமருத்துவமனை, குமாரபாளையம்.
2. இளைஞர்களும் மனநலமும் : திரு.கு.தங்கவேல், வழக்கறிஞர், செயலர், தமிழக லட்சியக் குடும்பம், குமாரபாளையம்.
3. சாரணசாரணிய விளக்கம் மற்றும் பயிற்சி வகுப்புகள் : திரு. பார்த்திபன், மற்றும் திருமதி. சத்தியபாமா, சாரண ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எம். மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்.

ஆகிய சிறப்பு விருந்தினர்கள் வழங்கிய சிறந்த கருத்துகள் எம் மாணவ செல்வங்களுக்குப் பெரிதும் பயனுள்ள வகையில் அமைந்தது. மேலும் பாடி வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணி முதல் 9.30 மணி வரையில் கோவை வெள்ளிங்கிரி மழைச்சாரலில் அமைந்துள்ள ஈசா யோக மையத்தின் ஆசிரியர்களால் எம் மாணவ, மாணவியர்களுக்கு யோகா பயிற்சி மற்றும் தியானப் பயிற்சி முறையாக அளிக்கப்பட்டது. இதனால் மாணவ, மாணவியர்களின் உடலும் உள்ளமும் முறையாகப் பண்பட ஏதுவாக இப்பயிற்சி அமைந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

மேலும் இப்பயிற்சிக்கு மாணவ, மாணவியர்களுக்குச் சலுகைக்கட்டணத்தில் தலா ரூ.150-வீதம் அனைத்து மாணவர்களுக்கும் ரூ.14,850- பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் இருந்து செலுத்தப்பட்டது. என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறுப்பு முதல்வர் திரு.மா. ஜெகநாதன் அவர்கள் முதன்மை பாடி அலுவலராகவும், வரலாற்று பேராசிரியர் திரு.மு.கந்தசாமி, துணைப்பாடி அலுவலராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றினர். மாணவ, மாணவியர்கள் இந்த 5 நாட்களில் தங்களின் ஆர்வம் மிக்க உழைப்பு மற்றும் ஒத்துழைப்பினை நல்கினர். கலைநிகழ்ச்சிகளின் மூலம் தங்களின் பல்வேறு மாறுபட்ட தனித்தன்மைகளையும் வெளிப்படுத்துபவர்களாகவும் விளங்கினர். கல்லூரி வளாகம் இவர்களின் களப்பணி மூலம் மேலும் தூய்மையடைந்தது குறிப்பிடத்தக்கது. தலைமைப்பண்பு, விட்டுக்கொடுக்கும் பண்பு, கூடிவாழ்தல், ஒற்றுமை உணர்வு ஆகியவற்றை மாணவ, மாணவியர்கள் மனதில் விதைக்கும் வண்ணம் இப்பாடி வாழ்க்கை சிறப்புப் பெற்றது. சிறப்புப் பேச்சாளர்களின் சிறப்புரைகள் மாணவ, மாணவிகளுக்கு வழிகாட்டும் அளவிலும், அறிவைப் பெருக்கும் வகையிலும் அமைந்தன. இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழக பி.எட்., மையமாக இக்கல்லூரி விடுமுறைக் காலங்களிலும் மிகச்சிறப்பாக இயங்கி கல்வி பணியைச் செய்து வருகிறது.

## விளையாட்டு விழா

இக்கல்லூரியில் உடற்கல்வித் துறைக்கு ஆசிரியர் இல்லாத குறையினைப் போக்கி விளையாட்டுத்துறைக்கு பொறுப்பேற்று விளையாட்டுப் போட்டிகளை நடத்த உதவிய பேராசிரியர். திரு.மு.கந்தசாமி வரலாற்றுத்துறை அவர்களுக்கும், விளையாட்டுப்போட்டுகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவச் செல்வங்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் உளமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறோம். விளையாட்டுப்போட்டிகளை சிறப்பாக நடத்திக் கொடுத்த அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு ஆசிரியர் பெருமக்களுக்கும் அனுமதி அளித்த தலைமை ஆசிரியர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இக்கல்லூரியின் இலக்கிய மன்ற ஆண்டு நிறைவு விழா போட்டிகள் 10.03.2006, மற்றும் 11.03.2006 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர். பொறுப்பாசிரியர்களாக இருந்து போட்டிகளை நடத்த உதவிய பேராசிரியர் திரு.என்.சுப்பிரமணியம், மற்றும் திரு.ச.மணிவண்ணன் அவர்களுக்கும், பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.

Scanned with CamScanner

## மாணவர் உதவித்தொகை

இக்கல்லூரியில் இவ்வாண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை 35 பேருக்கு ரூ.53,285 வழங்கப்பட்டது. மேலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவித்தொகை 24 பேருக்கு 1,33,170 வழங்கப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான உதவித்தொகை 16 பேருக்கு 26,756 வழங்கப்பட்டது. மேலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி கடன் உதவித்தொகை 23 பேருக்கு 1,49,500 அளிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் சமுதாய உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 19 மாணவ, மாணவியர்க்கு ரூ.34,250 வழங்கப்பட்டுள்ளது.

## விடுதி

இக்கல்லூரியில் மாணவ, மாணவியருக்கான தனி விடுதிகள் உள்ளன. அனைத்து மாணவ, மாணவிகளும் விடுதிகளிலேயே தங்கிப் படித்து வருவது கல்லூரியின் மற்றொரு அம்சமாகும். ஆண், பெண் இரு விடுதிகளுக்கும் பேராசிரியர் முனைவர்.அ. தேவகி அவர்கள் விடுதித் துணைக்காப்பாளராக செயலாற்றி வருகிறார். பகிர்ந்தளிக்கும் முறையில் குறைந்த செலவில் நிறைவான சேவை செய்யப்படுகிறது. இங்கு பணிபுரியும் தலைமை சமையல்காரர். திரு. ராமநாதன் மற்றும் விடுதியின் ஏனைய உதவியாளர்களுக்கும் கல்லூரியின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கல்லூரி கண்ட வளர்ச்சி

கல்லூரியின் சீரமைப்பு பணிக்காக பொதுப்பணித்துறையினரால் 5,80,000 - நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கல்லூரியின் தேர்ச்சி சதவீதம் தொடர்ந்து 100% இருந்து வருவது எங்களை பூரிப்படையச் செய்யும் பெருமை கொள்ளத்தக்க செய்தியாகும் என்பதை கூறிக்கொள்கிறோம்.

## பணியிடைப்பயிற்ச்சி

கீழ்காணும் பேராசிரியர்கள் ஆசிரியர் பணியிடைப்பயிற்சிக்காக பல்வேறு கல்வி நிறுவனங்களில் பெற்ற பயிற்சி விவரம்.

1) 02.06 2005 முதல் 22.06.2005 வரை சென்னை பல்கலைக்கழகம், 21 நாட்கள் நடத்திய Human Resource Development புத்தொளிப்பயிற்சியில் திருமதி. வெ. கலைச்செல்வி பங்கேற்றார்.

2) ஜீலை - 2005 தமிழ்ப்பல்கலைக்கழகம், நடத்திய 21 நாட்கள் நடத்திய தமிழ் புத்தொளிப்பயிற்சியில் முனைவர்.அ.தேவகி கலந்து கொண்டார்.

Scanned with CamScanner

3) இரண்டு நாள் பணியிடைப்பயிற்சியில் பேரா.எம்.கந்தசாமி, மற்றும் பேரா.என்.சுப்பிரமணியம் பெரியார் பல்கலைக்கழகத்தில் பங்கேற்றனர்.

4) 30.03.2006 இளைஞர் செஞ்சிலுவைச்சங்கம், பெரியார் பல்கலைக்கழகம் நடத்திய ஒரு நாள் கருத்தரங்கில் பேரா.ச.மணிவண்ணன் கலந்து கொண்டார்.

மேலும் மைய அரசின் நிதி உதவியின் கீழ் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்படி ரூ.29,60,000/- நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பணியிடைப்பயிற்சிக்கு | ... | ரூ.18,00,000 |
| கணிப்பொறி இயக்குபவர் ஊதியத்திற்கு | ... | ரூ.60,000 |
| கணிப்பொறி ஆய்வகத்திற்கு | ... | ரூ.80,000 |
| கணிப்பொறி வண், மென் தளவாடங்கள் வாங்குவதற்கு | ... | ரூ.7,75,000 |
| ஆய்வுப்பணிகளுக்கு | ... | ரூ.2,45,000 |

ஆறு மாவட்டங்களில் (சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி) உள்ள பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணியிடைப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நடைப்பெற்ற 62 பணியிடைப்பயிற்சிகளில் மொத்தம் 2,179 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 62 பயிற்சிகளுக்கும் பேரா.மு.கந்தசாமி வரலாற்று விரிவுரையாளர் அவர்கள் பயிற்சி இயக்குநராக பொறுப்பேற்று அனைத்துப் பணிகளையும் சிறப்பாக நடத்தி முடித்துள்ளனர் என்பது பாராட்டுக்குரியது.

ஆசிரியர் பணி அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி என்ற பொன்மொழிக்கு ஏற்ப கல்விப்பணியில் தம்மை முழு மனதாய் அர்ப்பணித்து நாட்டின் வருங்காலச்சிற்பிகளாய் ஆசிரியர்களை உருவாக்கும் பணியைச் செய்துவரும் எமது பேராசிரியப்பெருமக்களுக்கும், கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கும் அனைத்து அலுவலக அன்பர்களுக்கும் மாணவக் கண்மணிகளுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை உரித்தாக்கி ஆண்டறிக்கையை நிறைவு செய்கிறேன்.

* * * * * *

Scanned with CamScanner

## படித்தல்

ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் படியுங்கள்
வாரத்திற்கு 2 மணி நேரம் கிடைக்கிறது.
மாதத்திற்கு 8 மணி நேரம் கிடைக்கிறது.
ஒரு நல்ல புத்தகத்தைப் படிப்பதற்கு 4 மணி நேரம் போதும்
எனவே, மாதத்திற்கு இரண்டு புத்தகங்களைப் படிக்கலாம்
ஆண்டிற்கு 24 புத்தகங்களைப் படிக்கலாம்
வாசித்தல் சுவாசித்தலுக்கு ஈடானது.



- ச. மணிவண்ணன், கல்லூரி நூலகர்.

ஒரு புத்தகத்தின் உண்மையான விலையை இதுவரை யாரும் கொடுத்து வாங்கியதில்லை. அவர்கள் கொடுப்பது அச்சுக்கூலியும் காகித விலையும் தான்.

- லூயிகான்

நிறைய படியுங்கள், நிறைய தெரிந்து கொள்வீர்கள், அறிவு செம்மையாகும் எண்ணங்கள் உயர்ந்து விளங்கும், அவை வாழ்க்கையின் உயர்வுக்கு வழிவகுக்கும்

- ச. மணிவண்ணன், கல்லூரி நூலகர்.

எப்பொழுதும் நல்ல புத்தகங்களுக்கிடையே, எனது காலத்தைக் கழிக்க விரும்புகிறேன்.

- ஜவகர்லால்நேரு



E. Mary Geetha
B.Sc., Zoology.

Scanned with CamScanner

## A to Z Useful Web Address

| | | |
|---|---|---|
| A | Astronomy | - http://www.brookscale.com/astronomy/index.html |
| B | Blood Banks | - http://www.mediware.com/index.html |
| C | Credit Card | - http://www.citybank.com |
| D | Decorators | - http://www.retroware.com |
| E | Encydo Pedia | - http://www.encydopedia.com |
| F | Fastion Shows | - http://www.ftv.fr |
| G | Graphics | - http://www.graphitediemold.com |
| H | Horticulture | - http://www.hes.ohio-state.edu |
| I | India | - http://www.123india.com |
| J | Journalism | - http://www.csne.org |
| K | Kitchen Appliances | - http://www.kitchenart scenter.com |
| L | Laboratories | - http://www.acmlab.com |
| M | Money | - http://www.thisismoney.com |
| N | Navy | - http://www.navy.mil |
| O | Opical goods | - http://www.hunter.com.tw |
| P | Painting | - http://www.3dotstudio.com |
| Q | Queen | - http://www.pch.gc.cal.queen |
| R | Railways | - http://www.indianrailway.com |
| S | Schools | - http://www.gurukul.com |
| T | Temples | - http://www.tirumala.com |
| U | UPS | - http://www.opti_ups.com |
| V | Visa Services | - http://www.online.com/visa |
| W | Watches | - http://www.rolextime.net |
| X | X-ray | - http://www.advancedx-ray.com |
| Y | Yoga | - http://www.yogasite.com |
| Z | Zip Files | - http://www.winzip.com |

**Never Think of the Future**
**It comes soon enough**

**- Albert Einstein**



Kavitha Sellappan
Roll No : 66
Physical Science & Maths

Scanned with CamScanner

# TAKE TIME

Take time to **THINK**

It is the source of **POWER**

Take time to **READ**

It is the foundation of **WISDOM**

Take time to **PLAY**

It is the secret of **STAYING YOUNG**

Take time to be **QUIET**

It is the opportunity to **SEEK GOD**

Take time to **LOVE**

and **BE LOVED**

It is god's greatest **GIFT**

Take time to **LAUGH**

It is the **MUSIC** of

the **SOOL**


Take time to **WORK**

It is the price of **SUCCESS**

Take time to **PRAY**

It is the greatest **POWER**

on earth



**"THERE IS A TIME**

**FOR EVERY THING"**

**- BIBLE**

K. Premalatha


Roll No : 25

Optional : English / English

Scanned with CamScanner

## நோயாளி!

மருத்துவம் படிக்க எண்ணி
நுழைவுத் தேர்வினை எழுதி முடித்து
நுழைந்தேன் மருத்துவமனைக்குள்
நோயாளியாக!




ம. பிரபு
சுழல் எண் : 11
விலங்கியல்

## விதி!

பம்பரம் சுற்றினால்
கீழே விழாது என்பது
கெப்ளர் விதி .......
பசியின் கொடுமையினால்
தலை சுற்றி கீழே விழுவது
பாமர மக்களின்
ஏழ்மை விதி .......



ம. பிரபு
சுழல் எண் : 11
விலங்கியல்



## புறா!

நீ காத்துக் கொண்டிருப்பது .......!
இறையைத் தேடியா?
அல்லது
துணையைத் தேடியா?

G. Subramanian
Roll No : 19
Biological Science / Tamil.

Scanned with CamScanner

# INTERESTING QUIZ

There is no problem without a solution where these is a question, there is always an answer. Listed below is an interesting Quiz. These are single alphabet words, findout and enjoy the thrill of discovery!

1 ❊ A body part

2 ❊ A vegetable

3 ❊ A Large water body

4 ❊ Past partner

5 ❊ Present plural

6 ❊ Qustion

**Some words have two alphabets clubbed together to form one word**

7 ❊ Vacant

8 ❊ To surpass

9 ❊ Too much

10 ❊ Consent

**Answers:**

1) I 2) P 3) C 4) X 5) R

6) Y 7) M T 8) X L 9) X S 10) O K



Kavitha Sellappan
Roll No : 66
Physical Science & Maths.

## WHAT IS LIFE?

Life is blank .................... fill it

Life is problem, face it

Life is an equation, balance it

Life is a sum, solve it

Life is a load, carry it

Life is a ship sail in it

Life is a question, answer it

Life is a success, enjoy it

Life is a book, read it

Life is a game, win it

Life is a prayer, chant it

Life is a pain, bear it

Life is a camera, so better

- Face it with a smile.



## அன்புமொழி

ஊமைகளும் பேசலாம்

செவிடர்களும் கேட்கலாம்



இப்படிக்கு,

சீ. முருகானந்தம் M.Sc., B.Ed., Phy/ Tam.

Roll No: 84

Scanned with CamScanner

# தானத்தில் சிறந்தது

தானம் என்பது வறியார்க்கென்று ஈவதே ஈகை என்ற குறளடிகளின் வழிநின்று நோக்குங்கால் ஏழ்மை நிலையில் உள்ள யாசகர்களுக்கு ஏதேனும் பொருள் அல்லது பண்டமாகக் கொடுத்தல் எனப்படும். தானத்தினால் ஏற்படும் நற்பலன் அவரை மறுபிறப்பில் காத்து நிற்கும் என்பது முன்னோர்வாக்கு. கொடையிற் சிறந்தவன் கர்ணன். கர்ணனுக்கு பிறகு கொடையுமில்லை எனச் சிறப்பிக்கப்படும் கர்ணனை, மகாபாரதப்போரில் அவன் செய்த தானங்களின் பலன்கள் அவனைக் காத்து நின்றன. அவற்றைத் திருமால் யாசித்துப் பெற்றார். யான் செய்த தவமும், செய் தவமும் தங்களுக்கு ஈந்தேன் என்றான். எனவே ஒரு பொருளை மனமுவந்து யாசித்தோர்க்கு ஈதலின் பலன் உணரற்பாலது.

தானம் பலவகைப்படும் அவற்றுள் சிறந்தது அன்னதானம் என்போர் பெரியோர். ஒருவருக்கு பொருளையோ அல்லது பண்டங்களையோ கொடுத்தாலும் அவர் (யாசிப்பவர், பெறுபவர்) அவற்றால் மனநிறைவு கொள்ளாது மேற்கொண்டு கிடைத்தால் நிறைவாகும் என நினைப்பர். ஆனால் ஒருவருக்கு அன்னமிட்டால் அவரது வயிறு நிறைந்தவுடன் ஒரு கவளம் கூட அதிகமாக உண்ண மறுப்பார். போதுமெனச் சொல்லி விடுவார். ஆகவே போதும் என்ற நிறைவெய்துவது அன்னதானமேயாகும்.

ஆயினும் என் செய்வது? ஒரு வேளைக்கு யாசித்து உணவு உண்டவனுக்கு மறுவேளையின் போது வயிறு பசிக்கிறதே, என் செய்வது? இதனையே ஔவை மூதாட்டியார் ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இரு நாளைக்கே கென்றால் ஏகாய் என்றார். எனவே அன்னதானத்தின் பலன் அந்த வேளையுடனேயே நிறைவடைகிறது.

அடுத்ததாக கல்வித்தானம் ஒருவன் கற்கும் கல்வியானது அவனை வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுகின்றது. கற்றவருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு அல்லவா, அவனை மட்டுமின்றி அவன் குடுப்பத்தினரையும், சுற்றத்தினரையும் அவன் கற்ற கல்வி வாழ வைக்கிறது. ஐம்பூதங்களின் செயல்களாலும் அழிவற்றது. அஃதாவது, கல்வியை நீர் கரைக்கவோ, அடித்துச் செல்லவோ முடியாது. அவ்வாறே நெருப்புக்கூட எரிக்க முடியாது. காற்றும் அதனை அகற்ற முடியாது. நிலத்தினாலோ, ஆகாயத்தாலோ தீங்கு விளைவிக்க முடியாது. ஆகவே உயரிய பண்பும், நலனும் உடைய கல்வி நம்மை வாழ வைக்கிறது. காலத்தால் இவ்விதமான அரியதொரு கல்விச் செல்வத்தினை, அள்ள அள்ளக் குறையாத, தொட்டனைத் தூறும் மணற்கேணி போன்ற கல்வியினை கல்வி போதிப்பது பயிற்சி ஆசிரியர்கள் (Teacher Trainees) தாம் கற்ற கல்வியினை நன்முறையில் நம் பின்தோன்றல்களுக்கு போதிப்பது இவர்களது கடமையாகும். அவர்கள் கல்வியின் தரத்தையுயர்த்த பாடுபட வேண்டும். கல்வித்தானம் எல்லையற்றது. அன்னச்சத்திரம் ஆயிரம் கட்டுவித்தலின் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறந்தது என்றார் மகாகவி.

Scanned with CamScanner

இதனை விளக்க சிறுகதையினை இங்குக் காண்போம். ஒரு பெரிய செல்வந்தர் இருந்தார். அவருக்கு நான்கு புதல்வர்கள் இருந்தனர். அச்செல்வந்தர் தன் மனைவியுடன் காசி முதலான புனிதத் தலங்களுக்கு யாத்திரை சென்று வர விரும்பினார். ஆயினும் தன் பெருஞ்செல்வத்தினை எவ்வாறு பாதுகாப்பது, தனக்குப்பிறகு தன் செல்வம் வளர்ச்சியற்று விடுமேயென்று துயருற்றார். எனினும் அதனைத் தன் புதல்வர்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்க விரும்பி அவர்களை அழைத்துத் தனது பெருஞ்செல்வத்தை, தான் புனித யாத்திரை முடித்துச் சில ஆண்டுகள் கழித்து திரும்பி வருவதாகவும், அப்போது அவரது புதல்வர்கள் செல்வத்தை வீணடிக்காது தனித்தனியே வெவ்வேறு இடங்களில் இருந்து கொண்டு பல மடங்காக்கிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு சமமாகப் பகிர்ந்தளித்துச் சென்றார்.

நான்கு புதல்வர்களுள் மூத்தவன் அச்செல்வத்தை விளை நிலங்களாக வாங்கி பயிர்த் தொழிலை மேற்கொண்டான். ஐந்தாண்டுகளில் தந்தை கொடுத்த செல்வத்தைப் போல் மும்மடங்கு செல்வத்திற்கு உரிமையாளன் ஆனான். தவிரவும் நிலமும் சொந்தமாயிற்று.

இரண்டாமவன் தந்தையின் பொருளை வணிகத்தில் முதலீடு செய்து ஐந்தாண்டுகளில் இரு மடங்காக்கினான். நகரில் பெரிய வணிகன் எனப் பெயர் பெற்றான்.

மூன்றவது மகன் தனது தந்தையின் செல்வத்தைக் கொண்டு பெரியக் கல்விக்கூடம் அமைத்து பல மாணவர்களுக்கு கல்வி பயிலவும், மதிய உணவு, உடை இவற்றுக்கும் செலவிட்டான். கல்வி நிறுவனர், கல்வித் தந்தை என்னும் பெயர்களைப் பெற்றான்.

நான்காவது மகனோ தந்தையின் பணத்தைத் தான் இருந்த வீட்டின் பின்புறம் ஒரு மரத்தடியில் அகழ்வறையமைத்துப் பாதுகாத்தான்.

செல்வந்தர் தனது பயணத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்பினர். தனது புதல்வர்களின் திறமையையும், தன் செல்வத்தின் வளர்ச்சியையும் அறிய விரும்பி அவர்களை அழைத்து விசாரித்தார்.

மூத்தவன் தான் நிலச் சொந்தக்காரன் ஆனதையும், மும்மடங்கு செல்வத்தைப் பெருக்கியதையும் விவரித்தான். இரண்டாமவன் தன் வணிகத்திறனையும் இரு மடங்கு செல்வம் சேர்ந்ததையும், நான்காமவன் தான் அகழ்வரையில் பாதுகாத்த செல்வத்தை அப்படியே ஒப்படைத்ததையும் கண்ட செல்வந்தர் மூன்றாவது மகனைப் பற்றி விசாரித்தார். அவனோ தன் தந்தையின் செல்வமனைத்தையும் கல்விக்குச் செலவிட்டதைக் கூறி, தன்னால் செல்வத்தை பெருக்க முடியாமைக்கு நாணி நின்றான்.

இவற்றை ஆய்வு செய்த செல்வந்தர் தனது மூன்றாவது மகனை இறுகத் தழுவி, உச்சி முகர்ந்து தனது கனவு பலித்தது என்றும் தன் செல்வம் நாட்டின் செல்வமாகப் பன்மடங்கு வளர்ந்தது என்றும் பெருமகிழ்ச்சியடைந்தார்.

ஏனெனில் முதல் மகன் பயிர்த்தொழில் செய்து பெருஞ்செல்வத்தையீட்டினும், அது குறிப்பிட்ட சில தொழிலாளிகளுக்கும், அவர்களது குடும்பத்திற்கும் மட்டுமே உதவும். இரண்டாவது மகன் வியாபாரத்தினால் தன் சுய இலாபத்திற்காகப் பொருளீட்டினான். ஆனால் மூன்றாவது மகனோ செயற்கரியச் செயலைச் செய்ததன் மூலம், மாணவர்கள் கற்ற கல்வி அவர்களை உயர்த்துவதோடன்றி பிற்காலத்தில் அவர்கள் குடும்பத்தாரையும், அவர்களைச் சார்ந்தோரையும் உயர்த்த பற்றுக் கோலாக அமைந்தது. கணிதவியலில் நோக்குங்கால் (In multiples) பல மடங்காக உயர்வினை அளிக்க வழிவகை செய்துள்ளதாகக் கொண்டு பெருமைப்பட்டார்.

இவ்விதமாக ஒருவருக்கு அளிக்கும் கல்வியானது, கல்வித்தானமானது அவருக்கு மட்டுமின்றி, அவரது குடும்பத்திற்கும், சுற்றத்தாருக்கும் பிற்காலத்தில் அவரது சந்ததியினருக்கும் வாழையடி வாழையாக அவர்கள் மூலம் பயன்படும். எனவே கல்விதான் உலகில் மிகப்பெரிய தானமாகும். கல்வி கற்பதற்கு தகுதி பெற்ற ஆசிரியப் பெருமக்கள் உண்மையாகவே பெரும் பேறு பெற்றவர்கள். அவர்கள் வழிநின்று ஆசிரியப் பட்டதாரிகளுக்கான கல்வியியல் பாடம் பயிலும் நாமும் நம் சமுதாயத்தில் அனைத்து மாணவச் செல்வங்களும் உயர்வு பெற்று உய்திட உழைத்து நாமும் உயர்வோமாக!



சு. வேங்கடராமன், M.Sc., M.Phil.,
கணிதத்துறைச்செயலர்.

## மார்கழி

காலைப் பனித்துளிகள்
புல்லின் மீது காதல் கொள்ள
அதை எதிர்த்து
சூரியன் போர்கொடி தூக்க
அங்கே எழுந்தன
ஆயிரம் கல்லறைகள்.



அ. சித்ரமாலா
சுழல் என் : 02
Bio / Phy. Sci


## சுகமுடன் வாழ

சுமைகளைத் தாங்கு
சுகமுடன் வாழலாம்
சுயமரியாதையை அணி
சுறுசுறுப்புடன் வாழலாம்
நன்மைகள் செய்
நலமுடன் வாழலாம்
பாசங்கள் பெருக்கு
நேசங்கள் வளர்ந்திடும்
முடிந்தவரை நன்மை செய்
அடுத்தவரைக் கெடுக்கும்
அருவறுப்பான செயலில்
அறவே ஈடுபடாதே
ஆண்டவனுக்கு ஆலயம் கட்டுவதைவிட
அனாதைகளுக்கு இல்லம் கட்டு
இறந்தவனுக்கு கல்லறை கட்டுவதைவிட
இல்லாதவனுக்கு வீடு கட்டு
எல்லோருக்கும் அன்பு காட்டு
யாவருக்கும் ஈட்டி காட்டாதே



## ஆசிரியர்கள்

பணத்தைப் பெரிதாக நினைக்காமல்
குணத்தைப் பெரிதாக மதித்து
குன்றின் மேல் இட்ட விளக்காய்
அறிவோடு அன்பையும்
கதையோடு கலைகளையும்
கற்றுக் கொடுக்கும் கவரிமான்களாய்
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டைக் காதலித்து
நடைமுறைப்படுத்தும் நல்ல உள்ளங்கள்.



Name : S. Ambika
Optional : Tamil - Tamil.

Scanned with CamScanner

## LIFE

Live life as it comes;
Do not think over your past
Think about the present
For it will come and go away fast
Live life to the fullest
For you have but one life time
Make the best of today
Time doesn't wait for us
We have to use it wisely
You can't get back a previous day
So live today happily
We don't know how long we will live
In this unknown world of ours
So make life worth living
And god will double your remaining hours.



V. Arul Raj
English / English

## ABOUT THE EXCURSION TOUR

Our tour to hyderabad is a remarkable event that will always cherish in our memories. What inspired me very much was not the important landmarks in Hydrabad we visited, but the spirit of oneness that endeared as to each other that added much to the four. I could feel the aroma of fraternity that enabled us teacher trainees to keep up good discipline at all times. I wish we were always students because we can't get back such precious opportunities.

On behalf of all the teacher trainees. I express my sincere thanks to our principal, tour Co-ordinator, professors and the non-teaching staff for their efforts in making this excursion a profitable one.



E. David Prabhu
Roll No:23
(English / English)


Scanned with CamScanner

## MATH STUDENT'S LOVE LETTER

**My dear love,**

Yesterday, I was passing by your rectangular house in trigonometric lane. There I saw you with your cute circular face, conical nose and spherical eyes standing in your triangular garden. Before seeing you, my heart was a null set, but when a vector of magnitude (likeness) from your eyes at a deviation of theta radians made a tangent to my heart, it differentiated. My love for you is a quadratic equation with real roots which only you can solvely making good binary relation with me. The cosine of my love for you extends to infinity. I promise that I should not resolve you into partial functions. But if i do so, you can integrate me by applying the limits from o to oO. You are as essential to me as an element to a set, the geometry of my life revolves around your accute personality. My love, if you donot meet me at parabola restaurant on date 10 at sunset, when the sun is making an angle of 160 degrees, my heart would be like a solved polynomial of degree 10. With love from your higher order derivational of maxima & minima of an unknown.

Deepa & Usha
Maths



Scanned with CamScanner


## வியர்வைத்துளிகள்

வெற்றி பெற வேண்டும் என்றால்
நெற்றி வியர்வை சிந்த
உழைக்க வேண்டும்.
வியர்வை என்பது வெறும்
உவர் நீரல்ல! - அது
புதியதோர் உலகை உருவாக்கும் நீர்!
வியர்வை என்பது உவர் நீரல்ல
மாறாக அது பாட்டாளியின் செந்நீர்!
உழவனின் வியர்வைத் துளி
உணவைக் கொடுக்கும்!
நெசவாளியின் வியர்வை(த்) துளி
நம் மானத்தை காக்கும்!
மருத்துவரின் வியர்வை(த்) துளி
உயிர்களைக் காக்கும்!
உழைப்பாளியின் வியர்வை(த்) துளி
புதியதோர் உலகம் படைக்கும்!
வியர்வை(த்) துளி வியக்க வைக்கும்
வைரத்துளி.



V. சுகுமார்
தாவரவியல் துறை.

## அதுவும் இதுவும்



K. Muthulakshmi
Roll No : 044
Mat / Phy.Sci

Scanned with CamScanner

# அன்புள்ள தோழிக்கு.......



புறக்காரணிகளால்
உனை நிரந்தரமாக
வாழ்த்தவும் முடியாது
வீழ்த்தவும் முடியாது

நீ
சீதைதான்
உனை சுற்றிதான்
எண்ணிலடங்கா
இராவணர்கள்

அதனாலென்ன
அப்போதும்
நீ
சீதைதான்
சித்திரம்தான்.....

நீ
பீனிக்ஸ் பறவை
பிணந்திண்ணிகளுக்கு
உனை பற்றி
என்ன தெரியும்?

கசாப்பு கடைக்காரர்களிடம்
ஜீவகாருண்யத்தை
எதிர்பார்த்தால்
நாம்தான்
பைத்தியக்காரர்கள்

நெருப்பென்பதை
நிரூபித்துக் கொண்டேயிரு
வார்த்தையில் அல்ல
வாழ்க்கையில்.....

விஷமேறிய நினைவுகளை
கருச்சிதைவு செய்
பசுமை நினைவுகளை
பிரசவித்துக் கொண்டேயிரு
இதற்கு வேண்டாம்
தலைகீழ் முக்கோணம்

காலக் கணக்கொழிந்து
கூற்றுவன் நமை
அழைக்கும் போது
அன்பு, பாசம்
நட்பு, காதல்
மனிதம் எல்லாமே
நமக்கு முன்பே
மரணிக்கும்

அகத்தில் ஆயிரம் இன்னலோடு
புறத்தில் புத்துணர்ச்சியால்
வேஷமிட்ட உனக்கு
வாழ்க்கையைப் பற்றி
வகுப்பெடுக்க நான் யார்?

வயோதிகம் வந்தாலும்
குருதியின் இறுதிவரை
உன் சுக துக்கங்களில்
தோழமையோடு........

உ. கிருஷ்ணமூர்த்தி
தமிழ்த்துறை.

Scanned with CamScanner

# பொது அறிவு

| | |
|---|---|
| 1. தேசிய அறிவியல் தினம்? | - பிப்ரவரி 28 |
| 2. உலக வங்கியின் மறுபெயர் என்ன? | - IBRD |
| 3. எந்த நாட்டு பாலைவனத்தில் மணலோ கிடையாது? | - பெரு |
| 4. உலகிலேயே அதிக கிளைகள் கொண்ட வங்கி எது? | - பாரத ஸ்டேட் வங்கி |
| 5. முதன் முதலில் ஆங்கில அகராதியை தயாரித்தவர் யார்? | - NAOWESBSTER (அமெரிக்கா) |
| 6. தடை செய்யப்பட்ட நகரம் என்பது எது? | - லாசா (தீபெத்) |
| 7. ஒட்டும் அஞ்சல் தலைகள் வெளியிட்ட ஆண்டு? | - 1840. |
| 8. அதிக முட்டையிடும் உயிரினம் எது? | - கரையான் |
| 9. பாரத ரத்னா விருதை முதலில் பெற்றவர் யார்? | - ராஜாஜி |
| 10. உலகின் முதல் அறிவியல் அறிஞராக கருதப்படுபவர் யார்? | - ஆர்க்கிமிடிஸ் |
| 11. கௌரமான உலோகம் என்று எதற்கு பெயர்? | - வெள்ளி |
| 12. மனித உடலில் எவ்வளவு தசைகள் உள்ளன? | - 639 |
| 13. தமிழ்நாட்டில் பெண்களே நடத்தும் அஞ்சல் நிலையம் எங்கு உள்ளது? | - சென்னை. |
| 14. ஆஸ்கார் விருது சிலையின் வடிவத்தை உருவாக்கியவர் யார்? | - ஜார்ஜ் ஸ்டான்லி |
| 15. இசை கருவிகளின் அரசன் என அழைக்கப்படும் இசைக்கருவி எது? | - நாதஸ்வரம் |
| 16. பூமியின் அளவைக் கண்டுபிடிக்க முயற்சி செய்த அறிவியல் அறிஞர் யார்? | - பிதாகரஸ் |
| 17. டங்ஸ்டன் உலோகத்தை கண்டுபிடித்தவர் யார்? | - சார்ல்ஷலி. |
| 18. காதற்ற ஊசியும் வராது கான் கடை வழிக்கே என்ற பாடலை இயற்றியவர் யார்? | - பட்டினத்தார். |
| 19. செயற்கை உறுப்புகள் செய்யுமிடம் இந்தியாவில் எங்கு உள்ளது? | - பூனா |
| 20. தமிழ்முனி எனப்பெயர் கொண்டவர் யார்? | - அகத்தியர். |

பெயர் : பெ. பிரபு
சுழல் எண் : 12
பாடம் : உயிரியல்.

Scanned with CamScanner